10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 140 செவ்வாய்க்கிழமை ஒக்ரோபர் 10 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48




## மிதிவெடியில் சிக்கி கால் சிதைந்த மாடு

மறவன்புலோ கிழக்குப் பகுதியில் இன்று அதிகாலை மிதிவெடி ஒன்று வெடித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் சிக்கிய வளர்ப்பு மாடு ஒன்றின் கால் சிதைவடைந்துள்ளது. கணபதிப்பிள்ளை நகுலராசா என்பவரின் மாடே மிதிவெடியில் சிக்கியுள்ளது.

வீட்டின் பின்பக்கமாக உள்ள காணியில் இருந்த மிதிவெடியே வெடித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மறவன்புலோ கிராமம் 1999ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுவரை உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட பகுதியாகும். மக்கள் மீளக்குடியமர்ந்த வேளை அரச சார்பற்ற மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்று கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)



## பின்லாந்து அமைச்சருடன் ரணில் சந்திப்பு

பின்லாந்துக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அந்நாட்டின் சமூக அலுவல்கள் மற்றும் சுகாதார அமைச்சர் திருமதி பிர்க்கோ மற்றிலாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றிரவு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பின்லாந்தின் சுதந்திரத்துக்குப் பின்னரான 100ஆவது வருடத்தில் தமது நாட்டுக்கு வருகை தந்தமையை விசேடமாக கௌரவிப்பதாக திருமதி பிர்க்கோ மற்றிலா குறிப்பிட்டார். ஜனநாயகம், மனிதஉரிமை, சமூக சமநிலை, கல்வி, சுகாதரம் ஆகிய துறைகளில் இலங்கைக்கும் பின்லாந்துக்கும் இடையில் இருந்துவரும் அடிப்படை சமமானதாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தூதுக்குழுவினருக்கு அமைச்சர் திருமதி பிர்க்கோ மற்றிலா இரவு விருந்துபசாரம் ஒன்றினையும் வழங்கினார். (எ)

### "அரசியல் கைதிகளை விடுதலை செய்"

## வடக்கு, கிழக்கில் ஹர்த்தாலுக்கு அழைப்பு

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு மற்றும் கிழக்கில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வவுனியா மேல்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கை அனுராதபுரம் விசேட நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டாம் என வலியுறுத்தி அனுராதபுரம் சிறைச்சாலையில் மூன்று அரசியல் கைதிகள் தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது உடல்நிலை தற்போது மோசமடைந்த நிலையில் மூவரும் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் மூன்று அரசியல் கைதிகளினதும் கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் அரசியல் தீர்மானமெடுத்து உடனடியாக விடுவிக்க வேண்டும் ஆகிய இரு பிரதான கோரிக்கைகளை முன்வைத்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று மாலை யாழில் ஒன்றுகூடிக் கலந்துரையாடலில் ஈடுபட்டதன் அடிப்படையில் ஏகமனதாக இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது ஹர்த்தாலுக்கு 16 பொது அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்தன. (எ)

## வட மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

வடமாகாணத்தில் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளதாக அராசங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

"சுகாதார அமைச்சின் தரவுகளின் படி கடந்த ஒரிரு வாரங்களில் வட மாகாணத்தில் டெங்கு நோய் அதிகமாக பரவியுள்ளதாக இணங்காணப்பட்டுள்ளது. மரண வீதமும் யாழ்ப்பாணத்தை மையமாகக்

06

## நாமலின் செயலாளருக்குப் பிணை

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் கவர்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் படபொல ஆராச்சிலாகே ஒனெல்ல இரேஷா சில்வாவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அபுதாபியில்கைது செய்யப்பட்ட இவர், இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார். இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்த அவரைக் கைது செய்த நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேல் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். இதன்போதே அவருக்கு பிணை ழங்கப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்சவின் 30 மில்லியன் ரூபா கறுப்புப் பணத்தை, நிறுவனமொன்றின் மூலம் மாற்றுவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தேடப்பட்டு வந்த நிலையிலேயே, அவர் கைது செய்யப்பட்டிருந்தார். (உ)

## மைத்திரி, ரணில் வாக்குறுதியை தேரர்கள் நம்பவேண்டாம்



புதிய அரசியலமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நம்ப வேண்டாம் என்று மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரரிடம், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்தின் நிலை தொடர்பாக

06

## மைத்திரி, பொன்சேகா போட்டியிட்ட அன்னத்தின் உரிமையாளர் கைது

தாய்வான் வங்கி ஒன்றில் இருந்து சட்டவிரோதமாக 1.1 மில்லியன் அமெரிக்க டொலரை, இலங்கையில் உள்ள தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு மாற்றிய குற்றச்சாட்டில், லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரும், புதிய ஜனநாயக முன்னணியின் தலைவருமான சாலிலா முனசிங்க கைது



செய்யப்பட்டுள்ளார்.

இணைய மோசடிகளின்மூலம் தாய்வானின் தூரகிழக்கு அனைத்துலக வங்கியின் 60 மில்லியன் டொலர் இலங்கை, கம்போடியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டது.

06




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ வாகன கொள்வனவுக்கு நெல்லியடி வாணிபர் கழகம் நிதி

யாழ். மருத்துவ பீட மாணவர்கள் நடமாடும் மருத்துவ சேவைக்குரிய வாகன கொள்வனவுக்கான நிதிசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இவ் வாகனக் கொள்வனவுக்கு நெல்லியடி வாணிபர் கழகம் 25,000 ரூபாவை வழங்கியுள்ளதாக வணிக சங்க செயலாளர் சுரேரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இவ் நடமாடும் மருத்துவ வாகனம் பல்வேறு வைத்திய வசதிகளைக் கொண்டமைந்த ஒரு நடமாடும் மருத்துவமனையாகத் தொழிற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-11)



# பொலிஸ் அதிகாரிக்குப் பிரியாவிடை



இடமாற்றம் பெற்றுச் செல்லும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கிளிநொச்சி மக்களால் முதன்முதலாக பிரியாவிடை நிகழ்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரியாக இருந்து இடமாற்றம் பெற்று வேறொரு பொலிஸ் நிலையத்துக்கு செல்கின்ற பொலிஸ் உப பரிசோதகர் டிஎம் சத்துரங்கவுக்கே தர்மபுரம் கிராம மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று மாலை பிரியாவிடை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தர்மபுரம் பொதுநோக்குபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொலிஸ் அதிகாரிக்கு ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள், பொது அமைப்புக்கள், கிராம அலுவலர்கள் எனப் பலர் நினைவுச் சின்னங்களையும் வாழ்த்து மடல்களையும் வழங்கினர். இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக இருந்து பல சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தியது மட்டுமல்லாது சமூகத்துடன் சேர்ந்து பல சமூகப் பணிகளையும் அறப்பணிகளையும் செய்த இவரை வாழ்த்தி விடைகொடுப்பதோடு தற்பொழுது பதவி ஏற்றிருக்கின்ற பொறுப்பதிகாரி இவரைப்போல் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். (உ)

# முஸ்லிம்களை அடிமைகளாக மாற்றிவிட்டனர்

கிழக்கு மாகாண முஸ்லிம்களை மீண்டும் மேலாதிக்க சக்திகளின் அடிமைகளாக மாற்றுகின்ற செயற்பாடுகளுக்கு ரவூப் ஹக்கீமும் ரிஷாத் பதியுதீனும் துணை போய்க்கொண்டிருக்கின்றனர் என தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார். கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டவரும் கைத்தொழில், வர்த்தக அமைச்சின் கீழுள்ள நடா நிறுவனத்தின் பணிப்பாளருமான அன்வர் முஸ்தபா, தேசிய காங்கிரஸில் இணைந்து கொள்வது தொடர்பான ஊடக மாநாடு நேற்று இரவு கல்முனையில் நடைபெற்றபோதே அதாவுல்லா இதனைக் குறிப்பிட்டார். அங்கு உரையாற்றிய அவர்,

“நல்லாட்சியைக் கொண்டு வந்தவர்கள் நாங்களே என்று மார்தட்டிக்கொள்கின்ற அமைச்சர்களான ரவூப் ஹக்கீமும் ரிஷாத் பதியுதீனும் இந்த ஆட்சி முஸ்லிம்களுக்கு எதிரான பொல்லாட்சியாக மாறியிருப்பது தொடர்பில் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்கின்றனர். நாங்கள் இறைவனுக்கு பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லிக்கொண்டே அவர்கள் தொடர்ந்தும் முஸ்லிம்களுக்கு துரோகமிழைத்து வருகின்றனர். மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தின் மூலம் முஸ்லிம்களுக்கு பாரிய அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறது.” – என்றார். (உ)

# இலங்கையில் விமான அம்புலன்ஸ்



இலங்கையில் விமான அம்புலன்ஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். திடீர் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உயிர் ஆபத்துக்களைக் குறைத்துக்கொள்ளும் நோக்கில் இந்த சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் உரிய பாதுகாப்பு முறை ஒன்று இல்லாமையினால் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான நோயாளர்கள் முச்சக்கர வண்டியிலேயே அழைத்து செல்லப்படுகின்றனர்.

இதன் காரணமாகவே ஆகாய வழி அம்புலன்ஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (உ)

# சரத் என் சில்வாவின் மனு 19இல் விசாரணைக்கு



மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தாக்கல் செய்திருந்த மனுவை, எதிர்வரும் 19ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

மனு, பரிசீலனைக்கு நேற்று எடுத்துகொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், அந்த மனுவை நிராகரிக்குமாறு, உயர்நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

மனுதாரர், தன்னுடைய மனுவில் குறிப்பிடவேண்டிய அடிப்படைத் தகவல் எதனையும் உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்கவில்லை என்று, சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதிசொலிசிட்டர் எடுத்துரைத்தார். இதனையடுத்து மனு மீதான விசாரணையை, பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், எதிர்வரும் 19ஆம் திகதிக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. (உ)

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் சீனர்கள் கைது



சட்டவிரோதமாக ஒருதொகை சிகரெட்டுக்களை இலங்கைக்கு கொண்டு வர முற்பட்ட ஐந்து சீனப் பிரஜைகள், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விமான நிலையப் பொலிஸாருக்குப் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.


இதன்போது, சந்தேகநபர்கள் வசம் இருந்து 355 சிகரெட் பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சீனப் பிரஜைகளை மினுவன்கொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ)

# இருவர் கற்கும் பாடசாலையில் புலமைப் பரிசிலில் சாதனை

வவுனியாவில் ஒரேயொரு மாணவனை புலமை பரிசில் பரீட்சையில் தோற்றச் செய்து சித்தியடைய வைத்த அதிபரின் கடும் முயற்சிக்குப் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு வலயத்துகுட்பட்ட நெடுங்கேணி கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ளதுமான மிகவும் பின்தங்கிய கிராமப்புறச் சூழலில் அமைந்துள்ள பட்டடைபிரிந்தகுளம் அ.த.க. ஆரம்பப் பாடசாலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையே 02 என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பாடசாலை தரம் நான்கில் ஒரு மாணவனையும் தரம் ஐந்தில் ஒரு மாணவனையும் ஒரேயொரு கடமை நிறைவேற்றும் அதிபரான செல்லத்துரை செந்தில்நாதனையும் கொண்டதாக இயங்கிவருகின்றது. இங்கு தரம் 5 இல் கல்விகற்ற கெங்காதரன்.கென்றிக்சன் என்ற மாணவனே இந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரீட்சையில் 160 புள்ளிகளைப்பெற்றுள்ளார்.



மேற்படி மாணவன் இந்தக் கிராமத்திலும் குறித்த பாடசாலையிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முதல் மாணவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(உ)

# தற்கொலைத் தாக்குதலுக்கு உதவியவருக்கு விளக்கமறியல்

ரஷ்யாவின் முன்னாள் தூதுவரும் வடமத்திய மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 31 பேரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, பிரதான சந்தேகநபரான உமார் ஹாபிதாபியின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. அவரை, நவம்பர் மாதம் 2ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜானக உள்ளிட்ட 31 பேரை, தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்திப் படுகொலை செய்ததுடன், மேலும் 60 பேருக்கு பலத்த காயங்களை ஏற்படுத்துவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அவர், கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு, அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. இதன்போதே நீதிமன்றினால் இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சேகுவேராவுக்காக கியூபாவில் பேரணி

புரட்சியாளரும், கியூபாப் புரட்சிக்கு வலது கரமாகச் செயற்பட்டவருமான சேகுவேராவின் 50 ஆவது நினைவுதினத்தையொட்டி ஆயிரக்கணக்கானோர் கியூபாவில் பேரணியாகச் சென்றனர்.
சேகுவேராவின் 50 ஆவது நினைவு தினத்தையொட்டி கியூபாவில் ஞாயிற்றுக்கிழமை 50,000க்கும் மேற்பட்டோர் பேரணியாச் சென்றனர். இந்தப் பேரணியில் கியூபா அதிபர் ரால் காஸ்ட்ரோவும் சேகுவேராவுடன் போர்க்களத்தில் பயணித்தவர்களும் கலந்து கொண்டனர்.
நினைவு தினத்தில் கலந்து கொண்ட கியூபா துணை அதிபர் மிகுல் டைஸ் கேனல் பேசும் போது, “சே இறக்கவில்லை. இளைய தலைமுறையினர் சேகுவேராவைத் தங்களது முன்னுதாரணமாக அங்கீகரித்துள்ளனர். சே தற்போது உலகெங்கிலுள்ள அடையாளமாக மாறி இருக்கிறார்”என்றார். (இ)

# சாவு!


## 24 மணிநேரத்தில் 16 குழந்தைகள்



இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள கோரக்பூர் அரசு மருத்துவமனையில் மீண்டும் 24 மணி நேரத்தில் 16 குழந்தைகள் இறந்துள்ளதால், பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
உத்தரப்பிரதேச மாநிலம் கோரக்பூரில் பாபா ராகவ் தாஸ் (பிஆர்டி) அரசு மருத்துவமனை உள்ளது. இங்கு கடந்த 24 மணி நேரத்தில் 10 பச்சிளம் குழந்தைகள் உட்பட 16 குழந்தைகள் இறந்துள்ளன.
இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, “மருத்துவமனையில் பிரசவமான குழந்தைகளில், தீவிர சிகிச்சை பிரிவில் 10 குழந்தைகள், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் இருந்த 6 குழந்தைகள் என மொத்தம் 16 குழந்தைகள் கடந்த 24 மணி நேரத்தில் இறந்து விட்டன. பெரும்பாலான குழந்தைகள் மூளையில் தொற்று ஏற்பட்டதாலேயே அனுமதிக்கப்பட்டிருந்தன” என்றனர்.
“இந்த முறை ஒட்சிசன் பற்றாக்குறை அல்லது சிகிச்சை இல்லாமல் குழந்தைகள் இறக்கவில்லை. உண்மையில் மிக மோசமான நிலையில்தான் அந்தக் குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டன” என்றனர் மருத்துவர்கள்.
கடந்த ஓகஸ்ட் மாதம் இதே மருத்துவமனையில் ஒட்சிசன் இன்மையால், ஒரே வாரத்தில் 63 குழந்தைகள் இறந்ததால், இந்தியா முழுதும் பெரும் அதிர்ச்சியலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தூக்கிலிருந்து தப்பிய ரயில் எரிப்பு நபர்கள்

இந்தியாவில், கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் 11 பேரின் மரண தண்டனையை ஆயுளாகக் குறைத்து குஜராத் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த 2002, பெப்ரவரி 27 ஆம் திகதி கோத்ரா ரயில் நிலையத்தில் சபர்மதி விரைவு ரயில் கொளுத்தப்பட்டது. அதில் பயணித்த 58 கரசேவகர்கள் உயிரிழந்தனர். இந்த ரயில் எரிப்புச் சம்பவத்தை அடுத்து, குஜராத் முழுவதும் வன்முறை வெடித்தது.
இந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் 31 பேரை குற்றவாளிகளாக அறிவித்தது. அவர்களில் 11 பேருக்கு மரண தண்டனையும் 20 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டது.
இந்த நிலையில், விசாரணை நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து குஜராத் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.
இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் 11 பேரின் மரண தண்டனையையும், ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டனர். அதேவேளையில் ஏற்கனவே 20 பேருக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையையும் உறுதி செய்தனர். (இ)





## கொத்தாகச் செத்து மிதக்கும் நீர்யானைகள்

### நமீபியாவில் பரபரப்பு

நமீபியாவின் தேசியப் பூங்காவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நூற்றுக்கணக்கான நீர்யானைகள் கொத்தாகச் செத்து மிதந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தேசியப் பூங்காவில் திடீரென்று அந்த்ரக்ஸ் தாக்குதல் ஏற்பட்டதாலேயே நூற்றுக்கணக்கான நீர்யானைகள் கூண்டோடு உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இருப்பினும் உரிய ஆய்வுக்கு பின்னரே இந்தச் சம்பவத்துக்கான காரணம் குறித்து உறுதிசெய்யப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
இறந்து மிதக்கும் நீர்யானைகளை வல்லூறுகளும் முதலைகளும் பங்குபோட்டு உண்டு வருவதாகவும், உள்ளூர் மக்கள் கண்டிப்பாக அதன் இறைச்சிகளை உண்ண வேண்டாம் எனவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.
நமீபியா முழுவதும் சுமார் 1300 நீர்யானைகள் உள்ளதாகக் கருதப்படும் நிலையில் அதில் பெரும்பாலான நீர்யானைகள் அந்த்ரக்ஸ் தொற்றில் பாதிக்கப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கவிழ்ந்தது படகு: 12 ரோஹிங்யர் பலி!




மியான்மரில் ஏற்பட்டுள்ள வன்முறை காரணமாக பங்களாதேஷுக்குத் தப்பிச் செல்ல முயன்ற ரோஹிங்யா முஸ்லிம்களில் குறைந்தபட்சம் 12 பேர் படகு கவிழ்ந்ததில் பலியாகினர்.
கடந்த ஞாயிறன்று நஃப் நதியில் நிகழ்ந்த இந்தத் துயரச் சம்பவத்தையடுத்து அந்தப் படகில் இருந்த பல ரோஹிங்யர்கள் காணாமல் போயுள்ளனர்.
விபத்துக்குள்ளான அந்தப் படகில் குழந்தைகள் உட்பட நூறு பேராவது இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
தற்போது மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதுவரை பத்து குழந்தைகள், ஒரு பெண், ஒரு ஆண் ஆகியோரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
மியான்மரிலுள்ள ரக்கைன் மாநிலத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பிறகு அருகிலுள்ள பங்களாதேஷுக்குத் தப்பிச் செல்ல முயன்ற ரோஹிங்யர்களில் பலர் ஏற்கனவே இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## தகுதிநீக்க வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

தமிழக சட்டமன்றத்தில் அதிமுகவின் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 18 பேர், சபாநாயகரால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட வழக்கை, நவம்பர் 2 ஆம் திகதி வரை சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.
டிடிவி தினகரன் தரப்பில் வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, முதலமைச்சர் தரப்பில் அரசு வழக்கறிஞர் வைத்தியலிங்கம் ஆகியோர் ஆஜராகினர்.
தினகரன் தரப்பில் கூடுதல் மனுவைத் தாக்கல் செய்யவேண்டியுள்ளது என்றும் முதலமைச்சர் தரப்பில் ஆவணங்களைத் தாக்கல் செய்ய ஒரு வார காலம் அவகாசம் வேண்டும் என்றும் கோரப்பட்டது.
இதனையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, சபாநாயகர் குறிப்பிட்ட புகார்களுக்குக்கான பதில்களை டிடிவி தரப்பு எழுத்து பூர்வமாகச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும், முதலமைச்சர் மற்றும் சபாநாயகர் சார்பில் அளிக்க விரும்பும் அனைத்து ஆவணங்களையும், பதில் மனுக்களையும் ஒக்ரோபர் 23 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் கூறி, வழக்கை ஒத்திவைத்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இணையானவன் நான் இல்லை

"அஸ்வின், ரவீந்திர ஜடேஜாவுக்கு மாற்றாக - இணையாக என்னை நான் நினைக்கவில்லை" என்று இந்திய அணியின் சுழல்பந்துவீச்சாளரான குல்தீப் யாதவ் தெரிவித்தார்.

மணிக்கட்டை அதிகம் பயன்படுத்தி பந்து வீசும் சுழற்பந்து வீச்சாளர்களான குல்தீப் யாதவ், யுஸ்வேந்திர சாஹல் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு விக்கெட்டுகளை வீழ்த்தி வருவதால் அஸ்வின், ரவீந்திர ஜடேஜாவுக்கு தொடர்ச்சியாக இந்திய அணியில் வாய்ப்பு மறுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அபாரமாகப் பந்து வீசி வரும் குல்தீப் யாதவ் கவுகாத்தியில் நேற்று அளித்த பேட்டியில்,

"அஸ்வின், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் மூன்று வடிவிலான போட்டியிலும் இந்திய அணிக்காகத் தொடர்ந்து சீரான திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றாக என்னை நான் நினைக்கவில்லை. நானும், சாஹலும் மிகவும் குறைந்த வயதுடையவர்கள். இன்னும் எங்களுக்கு நிறைய ஆட்ட வாய்ப்புகள் எஞ்சியிருக்கிறது.

"நான் புதிரான பந்து வீச்சாளர் இல்லை. அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தி துல்லியமான அளவில் சரியான முறையில் பந்து வீசினால் துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்தலாம்.

ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர்களான பிராட் ஹொக், ஷேன் வோர்னே ஆகியோர் எனது கிரிக்கெட் வாழ்க்கையில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

இருவரிடமுமிருந்து நான் நிறைய விடயங்களைக் கற்றிருக்கிறேன். அவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறேன்." - இவ்வாறு குல்தீப் யாதவ் கூறினார். (ஐ)



# இரண்டாவது ஆட்டம் இன்று

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபது-20 போட்டி இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, ஏற்கனவே ஒருநாள் தொடரை பறிகொடுத்த நிலையில் 3 போட்டிகளைக் கொண்ட இருபது-20 தொடரில் பங்கேற்று வருகிறது.

இதிலும் முதலாவது போட்டியில் தோல்வியடைந்தது. இந்நிலையில், இன்று இரவு இரண்டாவது போட்டியில் களமிறங்குகிறது.

இன்றைய போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளதும் விவரம்:

**இந்தியா:** விராட்கோலி (அணித் தலைவர்), ஷிகார் தவான், ரோஹித் சர்மா, மனிஷ் பாண்டே, டோனி, கேதர் ஜாதவ், ஹர்திக் பாண்ட்யா, புவனேஷ்வர்குமார், ஜஸ்பிரித் பும்ரா, குல்தீப் யாதவ், யுஸ்வேந்திர சாஹல், நெஹ்ரா, தினேஷ் கார்த்திக், லோகேஷ் ராகுல், அக்ஷர் பட்டேல்.

**ஆஸ்திரேலியா:** டேவிட் வோர்னர்(அணித்தலைவர்), ஜோசன்பெரென் டோர்ப், டானியல் கிறிஸ்டியன், நதன் கவுல்டர் நிலே, ஆரோன் பிஞ்ச், டிராவிஸ் ஹெட், மோசஸ் ஹென்ரிக்ஸ், கிளைன் மெக்ஸ்வெல், டிம் பெய்ன், கனே ரிச்சர்ட்சன், அடம் ஜம்பா, மோர்கஸ் ஸ்டோனிஸ், அன்ட்ரூ டை. (ஐ)

# 27 வருட கால காத்திருப்பு

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பு எகிப்து அணிக்கு 27 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் கிடைத்துள்ளது.

உலகக் கிண்ணத் தொடருக்கு அணிகளைத் தெரிவுசெய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் பல்வேறு இடங்களில் நடந்து வருகிறது.

இந்நிலையில், கொங்கோவில் நடந்த ஆபிரிக்கக் கண்டத்துக்கான தகுதிச் சுற்றில் எகிப்து அணி, 2:1 என்ற கோல் கணக்கில் கொங்கோ அணியை வீழ்த்தி தனது பிரிவில் முதலிடம் பிடித்து உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற்றது.

1990ஆம் ஆண்டுக்குப் பிறகு எகிப்து அணி தற்போதுதான் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவுள்ளது. (ஐ)



# இசை வெளியீட்டிலும் பிரமாண்டம்

சங்கர் இயக்கத்தில் ரஜினி, எமி ஜாக்சன், அக்ஷய் குமார் நடிப்பில் உருவாகி இருக்கும் 2.0 படத்தின் இசையை பல கோடி ரூபா செலவில் பிரமாண்டமாக வெளியிட இருக்கிறார்கள்.

இப்படத்தின் '3டி மேக்கிங் வீடியோ' ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டது. இது ரசிகர்களிடம் நல்ல வரவேற்புப் பெற்று வைரலாகியது.

இன்னும் ஒரு பாடல் காட்சியின் படப்பிடிப்பு மாத்திரமே படமாக்க இருக்கிறார்கள். தற்போது, படத்தின் பின்னணி வேலைகள் பரபரப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், படத்தின் இசை வெளியீட்டு விழாவை எதிர்வரும் 27ஆம் திகதி டுபாயில் நடத்த படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். மிகப் பிரமாண்டமாக நடைபெறவிருக்கும் இந்த இசை வெளியீட்டு நிகழ்ச்சிக்கே 12 கோடி ரூபாவுக்கு (இந்திய மதிப்பு) மேல் பட்ஜெட் போட்டுள்ளனர் என அறிய முடிகிறது.

ஏற்கனவே, இப்படத்தின் 'பெஸ்ட் லுக்' வெளியீட்டை மிகப்பிரமாண்டமாக புதிய தொழில்நுட்பங்களுடன் நடத்தி முடித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய படக்குழு, இனி வரும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பிரமாண்டத்துக்குப் பஞ்சமிருக்காது என ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். (ஒ)

# இறுதியில் இந்து இளைஞர், கலைமதி

மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் நேற்று இரவு நடைபெற்ற அரையிறுதியாட்டங்களில் புத்தூர் கலைமதி மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகங்கள் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன.

மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் இரு அரையிறுதியாட்டங்கள் நேற்று இரவு நடைபெற்றன.

இதில், முதலில் நடைபெற்ற அரையிறுதியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

5 சுற்றுக்களைக் கொண்டதாக மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழகம் 3:2 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றியைத் தனதாக்கி இறுதிக்குள் நுழைந்தது.

பின்னர், நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டமும் 5 சுற்றுக்களைக் கொண்டதாக இருந்தபோதும், இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றியைத் தனதாக்கி, இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இறுதிப்போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)

# தந்தையும் மகனும் இணையும் 'MR. சந்திரமௌலி'

கார்த்திக் மற்றும் அவரது மகன் கவுதம் கார்த்திக் நடிப்பில் உருவாகவிருக்கும் புதிய படத்தின் தலைப்பை நடிகர் சிவகார்த்திகேயன் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டார்.

விஷாலின் 'நான் சிகப்பு மனிதன்' படத்துக்குப் பிறகு இயக்குநர் திரு இயக்கவுள்ள புதிய படத்தில் நாயகனாக கவுதம் கார்த்திக் நடிக்கவுள்ளார். மேலும் கவுதம் கார்த்திக்கின் தந்தையான 'நவரச நாயகன்' கார்த்திக் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார். அப்பா, மகன் இருவரும் இணைந்து நடிக்கும் முதல் படம் இது.

இப்படத்தை 'கிரியேட்டிவ் என்டர்டைனர்ஸ் ரூ டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்' நிறுவனம் சார்பில் தனஞ்சயன் வெளியிடுகிறார்.

இப்படத்தின் கதாநாயகிகளாக ரெஜினா, வரலட்சுமி சரத்குமார் ஆகியோர் நடிக்கிறார்கள். மேலும் நகைச்சுவை வேடத்தில் சதீஷ் நடிக்கவிருக்கிறார்.

இப்படத்துக்கு 'Mr.சந்திரமௌலி' எனத் தலைப்பு வைத்திருக்கிறார்கள். இதன் 'டைட்டில் லுக் போஸ்டரை' நடிகர் சிவகார்த்திகேயன் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். (ஒ)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 30 வருடகால கசப்பான யுத்த அனுபவம் இனியும் வேண்டாம்



எமக்கு முப்பது வருடகால கசப்பான யுத்த அனுபவம் மீண்டும் ஏற்படக் கூடாது என்று கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

நொச்சியாகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றியபோது இவ்வாறு குறிப்பிட்ட அமைச்சர் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பரவலாக்கமே நோக்கம் என்றும் கூறினார்.

எமக்கு முப்பது வருடகால யுத்தம் தொடர்பான கசப்பான அனுபவம் இருந்தது. இந்த அனுபவம் மீண்டும் ஏற்படக்கூடாது. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்றே கோருவதாக அமைச்சர் குறிப்பிட்டார். இந்தக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இரா.சம்பந்தனும் ஏற்றுக்கொண்டுள்ளமை சிறப்பம்சம் என்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் அங்கு மேலும் தெரிவித்தார். (உ)

## இன்றைய கருத்தோவியம்




அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டத்தில்

# ஆறு பேர் கைது

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, குழப்ப நிலையை ஏற்படுத்தியமை மற்றும் நீதிமன்ற உத்தரவை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேலும் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்ட நால்வர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இன்று இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ)

# எந்த ஒரு சுற்றுநிருபமும் மக்கள் சேவையை தாமதிக்கக் கூடாது



எந்தவொரு அரசாங்க சுற்று நிருபமும் மக்கள் சேவைகள் தாமதமாவதற்கு அல்லது வினைத்திறன் மிக்கதாக முன்னெடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணமாக அமையக்கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். எந்தவொரு தொழில் சார்ந்த சேவையின் வினைத்திறன் மற்றும் முறைமைப்படுத்தலுக்கு ஏதேனும் சுற்று நிருபம் தடையாக இருக்குமானால் அதனை உடனடியாகக் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். நேற்று முற்பகல் பொலன்னறுவை புத்தி மண்டபத்தில் இடம்பெற்ற உலக தபால் தின 143 ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். தபால் சேவையில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் கலந்துரையாடி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் இதன்போது குறிப்பிட்டார். எந்தவொரு தொழில்சார் பிரச்சினைக்கும் கலந்துரையாடல் மூலம் தீர்வுகாண முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (உ)

# சில தினங்களுக்கு மழை பெய்யும்

நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை அடுத்து வரும் சிலதினங்கள் அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. பல பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

குறிப்பாக பிற்பகல் 2 மணியின் பின்னர் பல பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சில பகுதிகளில் குறிப்பாக மேற்கு , சப்ரகமுவ, மத்திய , கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், காலி, மாத்தறை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மணிக்கு சுமார் 75 தொடக்கம் 100 மில்லிமீற்றர் வரையிலான மழை பெய்யக்கூடும். காங்கேசன்துறையிலிருந்து புத்தளம் , காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையிலான கடற்கரையோர பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. நாட்டைச் சுற்றியுள்ள கடற்கரையோர பிரதேசங்களின் பல பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். இடிமின்னலிலிருந்து பொது மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு திணைக்களம் அறிவித்துள்ளது. (உ)

# கிளிநொச்சியில் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் இவ்வாண்டு பெரும் போகத்துக்கான விதை நெல்லினைப் பெறுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலே கடந்த சிறுபோகத்தில் அக்கராயன்குளம், வன்னேரிக்குளம், குடமுருட்டிக்குளம், புதுமுறிப்புக்குளம், இரணைமடுக்குளம் என்பவற்றின் கீழ் விதை நெல்லினை இலக்காகக் கொண்ட சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. சிறுபோக செய்கையின் இறுதி நேரத்தில் குளங்களில் நீர் மட்டம் குறைவடைந்ததன் காரணமாக நெற்செய்கையில் பாதிப்புகள் ஏற்பட்டன. அவை அறுவடையிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. இதன் காரணமாக கூடுலான விவசாயிகள் தமது நெல்லினை விதை நெல்லிற்குப் பயன்படுத்த முடியாத நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளாக கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக நெற்செய்கை முழுமையாக வெற்றியளிக்கவில்லை.

இந்நிலையில் இன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் விதை நெல்லினைப் பெற்றுத் தருமாறு மாவட்டச் செயலாளரிடம் விவசாய அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (உ)

# பின்னோக்கி ஓடிய ரயிலால் பரபரப்பு

நாவலப்பிட்டியிலிருந்து கொட்டகலை எரிபொருள் சேமிப்பு நிலையத்துக்கு எரிபொருள் ஏற்றிவந்த ரயில் ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில் திடீரென பிரேக் இயங்காத நிலையில் பின் நோக்கி சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இன்று அதிகாலை 3 மணியளவிலே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11600 லீற்றர் டீசல் ஏற்றி வந்த குறித்த ரயில் ஹட்டன் ரயில் நிலையத்தை கடந்து சில நிமிடங்களில் திடீரென பின்நோக்கி வந்துள்ளது. உடனடியாக ரயில் அதிகாரிகள் பாதுகாப்பு பெட்டியிலிருந்த ஹேன் பிரேக்கை நிறுத்தி பாரிய விபத்தை தடுத்துள்ளனர். ரயிலின் பிரேக்கை இயங்குவதற்கான காற்றை வழங்கும் குழாய் வெடித்ததாலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் யாருக்கும் எவ்வித பதிப்புகளும் இல்லை என்றும் திருத்தப்பணிகள் இடம்பெற்று வருவதாகவும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். (உ)

# வைத்தியசாலை தரம் மாற்றம்

ஐ.டி.எச் தொற்றுநோய் வைத்தியசாலை தேசிய தொற்றுநோய் போதனா வைத்தியசாலையாக மாற்றப்படவுள்ளது.

இதற்குத் தேவையான திட்டங்களை பெற்றுத் தருமாறு சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரட்ன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். கொட்டிகாவத்த சனச சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார். கடந்த காலங்களில் கூடுதலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். தேசிய தொற்று நோய் பிரிவு நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலை உள்ளிட்ட நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் முறையான சிகிச்சை வழங்கப்பட்டதால், டெங்கு நோயை கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்ததென்று அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (உ)

# சிவனொளிபாதமலை டிசெம்பரில் யாத்திரை



சிவனொளிபாதமலை யாத்திரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி பௌர்ணமி தினத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த வெசாக் பௌர்ணமி தினம் வரை இந்த யாத்திரை நடைபெறவுள்ளது. இம்முறை யாத்திரியர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக சிவனொளிபாத விஹாராதிபதி சங்கைக்குரிய பெங்கமுவே தம்மதின்ன தேரர் தெரிவித்துள்ளார். (உ)

## நாளை நாளும் கோளும்

11.10.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 25 ஆம் நாள்

ஷஷ்டி பி.ப. 12.51 வரை | மிருகசீரிடம் பி.ப. 02 - 41 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 12.02 - 01.32 | சுபநேரம் 04.32 - 06.02 | எமகண்டம் 07.32 - 09.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெருமை | கவலை | சிந்தனை | பாசம் | ஓய்வு | அமைதி | பெருமை | இலாபம் | தரவு | ஊக்கம் | இன்பம் | பணிவு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



**1987.10.10**

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படையினருக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் போர் ஆரம்பமானது.

# தெல்தெனியவில் கோர விபத்து:

# மூவர் சாவு இருவர் படுகாயம்

தெல்தெனிய - கோனவல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். இன்று காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளுடன் மோதி, பின்னர் வீதியோரத்தில் நின்றுக் கொண்டிருந்த இரு பெண்கள் மீதும் மோதுண்டுள்ளது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மற்றும் வீதியோரத்தில் இருந்த இரு பெண்களுமே உயிரிழந்துள்ளனர். விபத்தில் காயமடைந்த மேலும் இருவர் தெல்தெனிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (உ)



## தூக்கில் தொங்கிய சடலம் மீட்பு


வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓமடியாமடுவில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் ஓமடியாமடுவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான காத்தமுத்து பிதாம்பரம் என தெரிவிக்கப்படுகிறது. 57 வயதான குறித்த நபரின் சடலம் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதை யடுத்து, உறவினர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## 200 மில்லியன் செலவில் மீன்குஞ்சு இனப்பெருக்க நிலையம்

தேசிய உணவு உற்பத்தி புரட்சியில் ஐந்தாவது நாளான இன்று மீன்பிடி தினமாகும்.
இதனை முன்னிட்டு கடற்றொழில் மற்றும் நீரகவள மூல அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டத்தில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.
இதன் கீழ் 200 மில்லியன் ரூபா செலவில் திருகோணமலை கல்லராவ மீன்குஞ்சு இனப்பெருக்க நிலையம் அமைச்சரினால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. அதனோடு இணைந்ததாக 10 லட்சம் மீன்குஞ்சுகள் நன்னீர் நிலைகளில் விடுவிக்கப்படவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
விசேடமாக மலையக பிரதேச மக்களிடையே மீன் நுகர்வை அதிகரித்தல், வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்களும் அமுல் படுத்தப்படவுள்ளன.
சாகரபுர மீனவர் வீடமைப்பு திட்டமும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ)

### அமெரிக்காவின் பசுபிக் கப்பல்படை:

## கட்டளைத் தளபதி இலங்கை பயணம்



அமெரிக்காவின் பசுபிக் கப்பல்படையின் கட்டளைத் தளபதி அட்மிரல் ஸ்கொட் சுவிவ்ற் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
கொழும்பில் நேற்று ஆரம்பமான இலங்கைக் கடற்படையின் 'காலி கலந்துரையாடல்-2017' கடல்சார் கருத்தரங்கில் பங்கேற்கவே அவர் இலங்கை வந்துள்ளார். அட்மிரல் சுவிவ்ற் நேற்றுக் காலி கலந்துரையாடலில், 'பாதுகாப்பைக் கட்டியெழுப்புவதற்கு நம்பிக்கை அடிப்படையிலான கடல்சார் உறவுகள்' என்ற தொனிப் பொருளில் உரையாற்றியிருந்தார்.
அதேவேளை, அமெரிக்காவின் பெறுமானங்களை காலி கலந்துரையாடலில் வலியுறுத்துவதற்காக அவர் வந்திருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார். (எ)

## கடல் அலைகள் மூலம் இலங்கையில் மின்சாரம்



கடல் அலைகள் மூலம் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையில் பின்லாந்து நாடு பெற்றுள்ள அனுபவத்தையும் தொழில்நுட்பத்தையும் இலங்கையுடன் பரிமாறிக் கொள்வதற்கு முன்வந்துள்ளது.
இது தொடர்பிலான திட்டம் இலங்கையில் அடுத்த வருடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பின்லாந்து நாட்டின் ஏடபிள்யூ எரிசக்தி நிறுவனத்தின் அதிகாரி ஜோன் லில் ஜிலன்ட் முன்வந்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏடபிள்யூ எரிசக்தி நிறுவன அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.
பின்லாந்துக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று இந்த தொழிற்சாலைப் பகுதிக்கு விஜயம் செய்தனர். (உ)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வட மாகா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட வட மாகாணத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலைமையை கவனத்திற்கொண்டு, ஜனாதிபதி செயலணி, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சுடன் இணைந்து அரசாங்க தகவல் திணைக்களமானது, அனைத்து ஊடக நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு வட மாகாணத்தில் பரவியுள்ள டெங்கு நோயினை ஒழிப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றினை செயற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது" - என்றுள்ளது. (எ)

**மைத்திரி, ரணில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியும், பிரதமரும் வழங்கியுள்ள உத்தரவாதம் குறித்து மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் தெரிவித்துள்ள கருத்து தமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார். 'இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும், பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை அகற்றுவதற்குமான அரசியல் நிகழ்ச்சி நிரலை மல்வத்த பீடத்தின் மகாநாயக்க மனதில் கொள்ள வேண்டும். இனரீதியாக நாட்டைப் பிரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை மகாநாயக்கர் ஆய்வு செய்ய வேண்டும்' என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

**மைத்திரி, பொன்சேகா...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலிலா முனசிங்கவின் வங்கிக் கணக்கிற்கும் 1.1 மில்லியன் டொலர் பணம் மாற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை நடத்தி லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரான சாலிகா முனசிங்கவை நேற்று கைது செய்தனர். இவர், முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினாலேயே இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன, சாலிலா முனசிங்கவின் தலைவராகக் கொண்ட புதிய ஜனநாயக முன்னணியின் அன்னம் சின்னத்திலேயே பொதுவேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார். 2009 ஆம் ஆண்டு புதிய ஜனநாயக முன்னணியை உருவாக்கிய சாலிலா முனசிங்கவின் அன்னம் சின்னத்திலேயே 2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவும் அன்னம் சின்னத்தில் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## நாவற்குழி ரயில் பாலம் மீள் புனரமைப்பு



நாவற்குழி ரயில் பாலம் மீள புனரமைக்கப்படவுள்ளது. 2014 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட போது இப்பாலம் புனரமைக்கப்பட்டது. எனினும் தற்போதுள்ள பாலம் தண்டவாளம் பொருத்தப்பட்ட இரும்பு கேடர்களில் இருந்து முழுமையாக அகற்றப்பட்டு புதிதாக அப்பகுதியில் பாலம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான வேலைகள் இந்தியன் ரயில்வே கம்பனியினால் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதுள்ள பாலத்துக்கு அருகில் அதே அளவில் புதியபாலத்துக்கான இரும்பு கேடர்கள் வைத்து பாலம் போல தற்போது பொருத்தப்பட்டு வருகின்றது. ரயில் சேவை 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை நாவற்குழி ரயில் நிலையத்துடன் நிறுத்திய பின்னர் பழைய பாலத்தை அங்கிருந்து அகற்றிவிட்டு அதேயிடத்தில் புதிய பாலத்தை பாரம்தூக்கி மூலம் தூக்கி வைத்து பொருத்தவுள்ளனர். (உ-212)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.